DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Special. Sessions Case No. 8/2017**

**Deposition of Witness for Prosecution : P.W. 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மதியழகன் | தகப்பனார் பெயர்/ கணவர் பெயர் | : | கிருஷ்ணசாமி |
| ஊர் | : | தாணிக்கோட்டகம் | தாலுக்கா | : | வேதாரண்யம் |
| ஜாதி | : | -- | வயது | : | 53 |
| மதம் | : | -- | தொழில் | : | வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 12.08.2026

**1 முதல் 3 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது செட்டியகாடு தகட்டூரில் வசித்து வருகிறேன். தாணிக்கோட்டகம் கடை வைத்து வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ராஜா (அ.சா.1), ஜெயராமன் (அ.சா.2), தமிழ்மணி (அ.சா.3) ஆகியோர்களை தெரியாது. இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு ஏதும் தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

2. போலீஸார் என்னை விசாரித்தபோது கடந்த 24.01.2017 அன்று மதியம் 03:30 மணிக்கு கடைக்கு பக்கத்தில் உள்ள சரவண ே◌ஹாட்டலில் சத்தம் கேட்டு போய் பார்த்த போது ஆஜர் எதிரிகள் அ.சா.1 ராஜா என்பவரை சாதி பெயரை சொல்லி திட்டி இழிவு செய்தார் என்றும், செருப்பாலும், காலாலும் முகத்தில் உதைத்தார் என்றும், கடையை விட்டு ராஜா வெளியே வந்த போது 1ம் எதிரி சத்தியராஜ் அடுப்பில் கிடந்த கட்டையை எடுத்து அ.சா.1 ராஜாவின் இடது தோள்பட்டை, முகம், இடது காதில் அடித்தார் என்றும், அதை பார்த்து கேட்க வந்த அ.சா.2 ஜெயராமன் என்பவரை 2ம் எதிரி காளிதாஸ் இடது கன்னத்தில் அடித்தார் என்றும், 1ம் எதிரி கட்டையை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார் என்றும், அதை நான் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** –இல்லை.

**மறுவிசாரணை** - இல்லை.

ஒப்பம்/- மதியழகன்

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/– T.H. Mohammed Farooq,
மாவட்ட/அமர்வு நீதிபதி,
நாகப்பட்டினம்.